# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2018. 03. 29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## இலஞ்சம் (திருத்தம்)

**(26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், ஒன்றில் மேல் நீதிமன்றத்தில் அல்லது நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதை ஏற்பாடு செய்கின்றது.

# இலஞ்சம் (திருத்தம்)

*ச.வ. - ஓ. 3/2018*

## *(26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலஞ்சம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*அத்தியாயம் 26 இன் 70ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவு, "நீதிவானொருவரினால் சுருக்கமுறையிலான விளக்கத்தின் மீதும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேல் நீதிமன்றமொன்றினாலான விளக்கத்தின் மீதும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீதும் அல்லது நீதிவானொருவரினாலான சுருக்கமுறையிலான விளக்கத்தின் மீதும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.